# யா/விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்

# பரிசில் நாள் ~ 2015

காலம்:-16.11.2015
நேரம் :-பி.ப 12.30
இடம் :-வித்தியாலய கலை அரங்கு

**தலைவர்**
**திரு.இ.நாகேந்திரன்**
(வித்தியாலய முதல்வர்)

**முதன்மை விருந்தினர்**
**கௌரவ தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்கள்**
(பாராளுமன்ற உறுப்பினர்)

**சிறப்பு விருந்தினர்**
**உயர்திரு.க.சிவசுப்பிரமணியம் அவர்கள்**
(L.L.B Jpum பழைய மாணவர்)

**உயர்திரு.அ.மனோறஞ்சிதன் அவர்கள்**
(உ.க.ப.ஆரம்பக் கல்வி தென்மராட்சி)

**கௌரவ விருந்தினர்**
**திருமதி.செ.பத்மநாதன் அவர்கள்**
(ஓய்வுநிலை அதிபர் யா/விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
அதிபர், ஆசிரியர், மாணவர்கள்
பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிகழ்ச்சி நிரல......

* விருந்தினரை அழைத்து வரல்
* மங்கல விளக்கேற்றல்
* இறை வணக்கம்
* தேசியக் கொடியேற்றல்
* பாடசாலைக் கொடியேற்றல்
* வரவேற்பு நடனம்
* ஆசியுரை
* வரவேற்புரை
* பரிசில் நாள் அறிக்கை வாசித்தல்
* பரிசில் வழங்கல்
* சிறப்பு விருந்தினர் உரை
* கௌரவ விருந்தினர் உரை
* பிரதம விருந்தினர் உரை

1.கலை நிகழ்வுகள்

2.நன்றியுரை

3.கொடியிறக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வித்தியாலய கீதம்......

எங்கள் கலாசாலை எங்கள் தமிழ் அன்னை
என்றென்றும் வாழிய வாழியவே!
கமலாசனி உயர் கலைகளை வளர்ப்பவள்
கண்ணியம் அன்பு நல் ஒழுக்கமும் வாய்மையும்
அறிமுதல் நாற்பொருள் அவனியில் நிலைத்திட
வித்தைகள் ஓங்கிடும் விடத்தற்பளையினில்
(எங்கள்)

அன்பொடும் அருளொடும் ஆற்றுநல் அறங்களும்
இன்பொடும் பண்பொடும் இயற்றிடும் தருமமும்
உடல் நலம் ஓவியம் ஓங்கு விஞ்ஞானமும்
கண்ணெனப் பயன்தரு கலைகளையும் வளர்
(எங்கள்)

தொழில் முறைப் பாடங்கள் தோத்திரம் சாத்திரம்
சாரணப் பயிற்சியும் தக்க கைத்தொழில்களும்
ஆங்கிலம் விவசாயம் அனைத்தையும் கற்பித்து
இகத்திலும் பரத்திலும் இன்பமே ஊட்டிடும்
(எங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை முதல்வரின் பரிசில் நாள் அறிக்கை

இன்றைய பரிசில் நாள் நிகழ்வில் பிரதம் விருந்தினராக கலந்து சிறப்பித்துக்கொண்டிருக்கும் மதிப்பிற்குரிய பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ தர்மலிங்கம் சித்தார்த்தன் ஐயா அவர்களே!

சிறப்பு விருந்தினர்களாக கலந்து எம்மை மகிழ்வித்துக்கொண்டிருக்கும் பழைய மாணவனும் சட்டத்தரணியுமான உயர்திரு.சிவசுப்பிரமணியம் ஐயா அவர்களே!

தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு அருணாசலம் மனோரஞ்சிதன் அவர்களே!

கௌரவ விருந்தினராக அவையை அலங்கரிக்கும் ஓய்வுநிலை அதிபர் திருமதி.செ.பத்மநாதன் அவர்களே!

வண இந்துமதக்குருவும் இப்பாடசாலையின் விஞ்ஞான பாட ஆசிரியருமான சிவஸ்ரீ தி.கிருஷ்ணமூர்த்தி குருக்கள் ஐயா அவர்களே!

பிரதிக் கல்விப் பணிப்பாளர்களே! கோட்டக்கல்விப் பணிப்பாளர் அவர்களே! கிராம சேவையாளர்களே! கோட்ட, வலய உத்தியோகத்தர்களே! அயற்பாடசாலை அதிபர்களே! ஓய்வு நிலை அதிபர்களே! அயற்பாடசாலை ஆசிரியர்களே! பாடசாலை அபிவிருத்தி சபை உறுப்பினர்களே! செயலாளர் அவர்களே! பெற்றோர்களே! நலன் விரும்பிகளே! பழைய மாணவர்களே! அன்பான மாணவச் செல்வங்களே! உங்கள்அனைவரையும் பாடசாலைச் சமூகம் சார்பாக இருகரம் கூப்பி வரவேற்பதோடு என் இனிய காலை வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## பிரதம விருந்தினர் அவர்களே!

பல்வேறு கடமைகளுக்கு மத்தியிலும் எமது தொலைபேசி அழைப்பை ஏற்று பல மைல் தொலைவில் இருந்து இங்கு வருகை தந்து விழாவை சிறப்பித்தமைக்கு முதலில் எனது நன்றிகள்.

கடந்த வருடம் மாகாணசபை உறுப்பினராக கலந்துகொண்ட தாங்கள் இன்று பாராளுமன்ற உப்பினராக இவ் விழாவை அணிசெய்வதில் எமக்கு மட்டற்ற மகிழ்ச்சி. மனிதம் நிறைந்த சான்றோர் வரிசையில் தங்களையும் ஒரு தலைவராக நான் மதிக்கின்றேன். இந்த வகையிலே தங்களை பிரதம விருந்தினராக அழைப்பதெனற முடிவை நான் முன்வைத்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களின் பெயர் கூற இப்பாடசாலையில் சில தடங்களை நீங்கள் பதித்தீர்கள். பருகும் நீரும் அணியும் காலணியும் உங்கள் பெயர் கூறுகின்றன. மேலும் பல தடங்களை இங்கு பதியச் செய்வீர்கள் என நம்பிக்கை எமக்குண்டு

இப் பாடசாலையை நீங்கள் மனப்பூர்வமாக நேசித்துள்ளீர்கள் என்ற செய்தியை அறிய ஒரு சந்தர்ப்பம் கழடைத்தது. செல்வன் லிரூஜனன் அவர்கள் 9A சித்திபெற்றதை பத்திரிகையில் வாசித்தவுடன் எனக்குத் தொலைபேசியில் வாழ்த்துக்கூறிய முதல் மகன் நீங்கள் தான். அதுமட்டுமன்றி "அந்தப் பையனை ஒரு தரம் சந்திக்க வேண்டும்" என்று கூறினீர்கள். அந்த நாளாகிய இன்று இன்று சித்தி பெற்ற அனைத்து மாணவரையும் கௌரவிக்கும் செயலைத் தாங்களே செய்ய முன்வந்தீர்கள்.

## சிறப்பு விருந்தினர்களே!

எமது அழைப்பை ஏற்று விழாவில் கலந்து சிறப்பித்துக்கொண்டிருக்கும் இப் பாடசாலையின் பழைய மாணவனும் சட்டத்தரணியுமான சிவசுப்பிரமணியம் ஐயா அவர்களே! தாங்கள் இப் பாடசாலையில் இடைநிலை கல்வி வரை கற்று சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் உயர் கல்வியையும் தொடர்ந்து. வர்த்தகப்பிரிவில் பட்டப்படிப்பை தொடர்ந்து நீங்கள் சட்டத்துறையில் சிறுவயதில் கொண்ட நாட்டம் காரணமாக வெளி நிலையான சட்டத்துறைக் கல்வியை முடித்து நேர் வழியில் பணியாற்றி வருகின்றீர்கள் என்பது தங்கள் பிள்ளைகள் மூவரும் வைத்தியத் துறையில் நிபுணர்களாக விளங்குவதனைக் கொண்டு யாவராலும் விதந்து பேசப்படும் உண்மையாக விளங்குகிறது.

தங்களை நான் முன்பின் அறியவில்லை. எனினும் தாங்கள் பாடசாலை மீது கொண்ட பற்றை 9A பெற்ற மாணவனைத் தேடிவந்து பாராட்டி வெகுமதியளித்த செற்பாட்டின் மூலம் நான் அறிந்து கொண்டதன்படி சிறப்பு விருந்தினராக அழைக்கும் முடிவை எடுத்தேன்.

புகழ்பூத்த பழைய மாணவனாக சிறந்த பெற்றோருக்கு முன்னுதாரணமாக கல்விச் செல்வத்தில் திளைத்த தலைவானக இவ் விழாவின் நடுவில் காண்பதில் பேருவகை அடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக்கு நிலையான பணியாற்ற தாங்கள் விரும்பிய போது நாம் கேட்ட படி பாடசாலைத் தெற்குப்புற 150 அடி மதிலை கட்டி தர பூரண சம்மதம் தெரிவித்து இணக்க கடிதத்தையும் கையளித்தமைக்கு பாடசாலைச் சமூகத்தின் சார்பில் எனது மனப்பூர்வமான பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றேன்.

சிறப்பு விருந்தினர் வரிசையில் வலயக்கல்வி அலுவலகத்தின் சார்பில் கலந்து சிறப்பித்துக்கொண்டிருக்கும் எனது நண்பனும் ஆரம்பக் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளருமாகிய திரு.அருணாசலம் மனோரஞ்சிதன் அவர்களே!

தாங்கள் இவ் வலயத்தில் ஆரம்ப உதவிக்கல்வி பணிப்பாளராக பதவிஉயர்வு பெற்றமை தங்களின் உயர்ந்த உழைப்பிற்குக் கிடைத்த வெகுமதியே. இந்த சந்தர்ப்பத்தில் தங்களை முதன்முதலில் சிறப்பு விருந்தினராக அழைப்பதில் எமது பாடசாலை பெருமிதமடைகிறது.

எதிர்காலத்தில் எமது பாடசாலைத் தேவைகளை நிறைவேற்றுவதில் வலயமட்டத்தில் தங்களின் கரிசனையும் சிறப்பிடம் பெறவேண்டுமென தங்களை மனதார வேண்டுகின்றோம்.

கௌரவ விருந்தினராக அவையின் நடுவில் வீற்றிருக்கும் எமது பாடசாலையின் ஓய்வுநிலை அதிபர் திருமதி.பத்மநாதன் அவர்களே! இப்பாடசாலை அதிபர் வரிசையில் கடமையாற்றிய பெண் அதிபர் என்ற பெருமைக்குரிய தங்களின் சேவைக்காலம் தனித்துவமான சாதனைக்காலம் ஆகும்.

கடமை நேரத்தில் மிகுந்த அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு பல புதிய யுத்திகளைக் கையாண்டு பாடசாலைக் கல்வி இணைபாட விதானச் செயற்பாடுகளில் முன்னிலை வகித்தமை தங்களின் சேவைக்கு சான்றாக விளங்குகின்றது. ஓய்வுக்காலத்திலும் இப் பாடசாலையை ஒரு முறை பார்க்க வேண்டும் என்ற பேரவாக் கொண்ட தங்களைக் கௌரவ விருந்தினராக அழைப்பத்தில் பெருமிதமடைகின்றோம்.

சேவையின் நாயகர்களாக விளங்கும் விருந்தினர் அனைவரையும் மீண்டும் ஒரு முறை வாழ்த்திதொடர் உரைக்குச் செல்கிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை ஆசிரியர் குழாம்

எமது பாடசாலையில் 14 நிரந்தர ஆசிரியர்க்கும் பகுதி நேர கணினி தொழில்நுட்ப ஆசிரியர் ஒருவருக்கும் தேவை உள்ள நிலையில் 17 1/2 ஆசிரியர்களுடன் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

### 1.இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள்

1.திருமதி.க.நவதீசன்
2.திருமதி.கௌ.சிவசிதம்பரம்
3.திருமதி.வி.தேவஈஸ்வரன்
4.திரு.க.கஜகரன்

### 2.புதிதாக இணைந்து கொண்ட ஆசிரியர்கள்

1.திருமதி.சி.திருப்பதி
2.திருமதி.சி.சந்திரகாந்தன்
3.திருமதி.வி.சிவபாலன்
4.திருமதி.க.செல்வராசா
5.திருமதி.ஜெ.நந்தகுமார்
6.திருமதி.ந.கணபதிப்பிள்ளை
7.திருமதி.ந.ஜென்சன்றொனால்ட்

### 3.பயிற்சிக்கலாசாலை சென்ற ஆசிரியர்கள்

செல்வி.பி.அகல்யா

### 4.தற்காலிக இணைப்பு பெற்ற ஆசிரியர்

திரு.செ.ஜெயசீலன்

### 5.கல்வி சாரா ஊழியர்கள்

திரு.கு.பவானந்தம் (பாடசாலை பணியாளர்)
திரு.க.கோபினாத் (இரவுக்காவலாளி - இவர் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்)

இப்பாடசாலையில் சேவையாற்ற சுயமாக முன்வந்த ஆசிரியர்கள் ஊழியர்களின் சேவையினை பாராட்டுவதோடு அவர்களின் சேவை மேலும் வினைத்திறனோடு நீடித்து நிலைக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாணவர் விபரம்**

| | 2014 | | | 2015 | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆ | பெ | மொ | ஆ | பெ | மொ |
| ஆரம்ப பிரிவு | 38 | 43 | 81 | 43 | 44 | 87 |
| இடைநிலை பிரிவு | 50 | 58 | 108 | 46 | 55 | 101 |
| மொத்தம் | 88 | 101 | 189 | 89 | 99 | 188 |

**தரம் 1 இல் இணையும் மாணவர் எண்ணிக்கை**

| | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|---|
| ஆண் | 11 | 10 | 5 | 8 | 9 |
| பெண் | 8 | 11 | 11 | 9 | 7 |
| மொத்தம் | 19 | 21 | 16 | 15 | 16 |

கடந்த ஐந்து வருடங்களில் தரம் 1 இல் அனுமதி பெறும் மாணவர் எண்ணிக்கை தளம்பல் இன்றி செல்வதையும் எதிர் கால மாணவர் வளத்தை தக்கவைக்கக் கூடியதாக அமையும் என்பதையும் பாடசாலை வளர்ச்சி போக்குப்பற்றி உறுதியுடன் கூறக்கூடிய எதிர்வு கூறல் ஆகும்.

## கல்வி அபிவிருத்தி

மாணவர்களின் கல்வி சார் அடைவு மட்டத்தை உயர்த்துதல் பௌதீக வளத்தை விருத்தி செய்தல் ஆசிரிய வளத்தை பொருத்தமான முறையில் பயன்படுத்தல் என்ற நோக்கில் செற்பாடுகள் முன் நகர்த்தப்பட்டு வருகின்றன.

இந்த வகில் மாணவரின் அடைவுமட்டத்தை உயர்த்தும் நோக்கில் பல்வேறு கல்விச் செயற்பாடுகள் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. கல்வி அதிகாரிகள் ஆசிரியர்கள் அதிபர் ஆகியோரின் கூட்டு முயற்சியினால் இது சாத்தியமானது. பாடசாலை நேரத்திற்குப் புறம்பாக காலை மாலை நேர வகுப்புகள் கணிதபாட விசேட வகுப்பகள் புலமைப்பரிசில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பகள் முதலானவை நடைபெறுகின்றன. இவற்றின் மூலம் தேசிய மட்டப் பரீட்சைகளில் எமது பாடசாலை தகமையைத் தக்கவைத்துக்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## க.பொ.த சாதாரண தரம்

| ஆண்டு | தோற்றியோர் | சித்தியடைந்தோர் | சித்தி வீதம் |
|---|---|---|---|
| 2013 | 17 | 05 | 31.58% |
| 2014 | 08 | 05 | 62.5% |

2014ம் ஆண்டு க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை சித்தி வீதம் 50% ஆல் அதிகரித்த அதே வேளை ஒரு 9A சித்தி பெற்று தென்மராட்சி வலயத்தில் எமது பாடசாலைக்கு மங்காப்புகழை ஈட்டித் தந்தார். எமது பாடசாலையை இது வலய மட்டத்தில் 9A பெற்ற பாடசாலைகளில் 1/3 ஆக மிளிரச் செய்தது.

1.ந.லிரூஜனன் - 9A
2.செ.சௌந்த ஜெத்சமணி - 6A 2C
3.சி.சிவப்பிருந்தா - 3A 3B 1C 2S
4.இ.பிருந்தா - A B 3C 3S
5.நா.நிருஷன் - 2B 3C 2S

சி.பவித்திரன் - 152 புள்ளி

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

| ஆண்டு | தோற்றியோர் | வெட்டுப்புள்ளிக்கு மேல் | | 100ற்கு மேல் | 70ற்கு மேல் | 70ற்கு கீழ் |
|---|---|---|---|---|---|---|
| 2013 | 21 | 03 | 14.28% | 35% | 25% | 25% |
| 2014 | 10 | 01 | 10% | 40% | 30% | 20% |

## இணைபான விதானச் செயற்பாடுகள்

கல்வி சார் செயற்பாடுகளுக்கு சமாந்தரமாக மாணவரின் ஆழுமையை வளளர்க்கும் இணைபாட விதானச் செயற்பாடுகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இந்தவகையில் உடற்பயிற்சி மெய்வல்லுனர் போட்டிகள் செயற்பட்டு மகிழ்வோம், உள்ளக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டுக்கள், அழகியல் தமிழ்த்தினம், சமூக விஞ்ஞானம், அனர்த்த முகாமைத்துவம், கணித விஞ்ஞானம், நூலகம்சார் போட்டிகள், திறன்கள் தொடர்பான போட்டிகள் மாணவர்கள் பங்குபற்றி பல்வேறு நிலைகளிலும் தேர்ச்சி பெற்று வருகின்றனர்.

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம் (SDS)

புதிய சுற்றுநிருபத்திற்கு அமைவாகத் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பாடசாலை அபிவிருத்திக் குழுவும் (SPC) பாடசாலை முகாமைத்துவக்குழு (SMT) அதனோடு இணைந்த உப குழுக்களும் 31.03.2014 முதல் முறையாக அமைக்கப்பட்டு தம்து பணியை ஆற்றி வருகின்றன. S.D.C யின் செயலாளராக திரு.கா.லோகநாதன் செயற்படுகிறார். பொருளாளராக ஆசிரியர் திரு.சி.தவராசசிங்கம் பணியாற்றுகின்றார். வலயப்பிரதிநிதியாக திரு.வே.பாலசுப்பிரமணியம் (DDE) செயற்படுகின்றார். பாடசாலை வளர்ச்சிப் பணிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துவரும் குழுக்களின் உறுப்பினர்களுக்கு இந் நாளில் எனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## மாணவர் முதல்வர் குழு

பாடசாலை முதல்வர்களின் பங்களிப்பு இன்றியமையாத ஒன்றாகும். அந்தவகையில் எமது பாடசாலை அணியினரும் சிறப்பாக செயற்பட்டு வருகின்றானர். அந்தவகையில் அங்கத்தவர் தெரிவு, சின்னஞ்சுட்டல், தலைவர் தெரிவு, கடமைப் பொறுப்பு, ஒழுங்கு விதிகள் யாவும் முறையாகப் பேணப்படுகின்றது. செல்வன் கு.உதயதர்சன், செல்வி லோ.குமுதினி ஆகியோர் இவ்வாண்டின் தலைவராகச் செயற்படுகின்றார்கள். ஒழுக்காற்றுக்குழு ஆசிரியர்களுக்கும் அதனை நெறிப்படுத்தும் ஆசிரியர் திரு.பா.விக்கினேஸ்வரன் அவர்கட்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மன்றங்களும் விழாக்களும்**

மாணவர்களின் உள்ளார்ந்த திறன்களை வளர்க்கும் நோக்கில் மன்றங்கள் உருவாக்கப்பட்டு மாதாந்தம் ஒரு நிகழ்வு என்ற வகையில் ஒவ்வொரு புதன் கிழமையும் திட்டமிட்ட அடிப்படையில் தமிழ், இந்து சமயம், கணிதம், விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம், ஆகிய மன்றங்கள் நடைபெறுகின்றன. அனைத்து மன்றங்களையும் உள்ளடக்கிய சஞ்சிகை ஒன்று "சங்கமம்" என்ற பெயரில் தவணைக்கு ஒரு தடவை வெளியிடப்படுகிறது.

இவற்றுடன் இந்துப் பண்டிகைகள், குருபூசை தினங்களும் நடைபெறுகின்றன.

உப அதிபர் திருமதி.கு.கதிர்காமநாதன் அவர்கள் இவற்றை நெறிப்படுத்தி வருகின்றார். அவரது பணிகள் மேலும் சிறக்க எனது பாராட்டுக்கள்.

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**

எமது ஆசிரியர் நலன்புரிச் சங்கமானது கடந்த ஆண்டு முதல் எழுதப்பட்ட யாப்பின் அடிப்படையில் கிளைப்பாதையில் பயணிக்கின்றது. ஆசிரியர் நலன்களைக் கவனிப்பதுடன் அவர்துகளுடன் சகோதரத்துவ உறவைப் பேணி வருகின்றது. அதற்கமைய ஆசிரிய இடமாற்றம், ஓய்வு, பதவி உயர்வு, முதலிய காரணங்களால் வெளியேறும் ஆசிரியர்கள் உரிய முறையில் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்படுவதுடன் அவர்களின் குடும்பங்களில் இடம்பெறும் மங்கள அமங்கள நிகழ்வுகளிலும் முறையாகப் பங்கு கொண்டு வருவதனூடாக ஆசிரியர்களிற்கிடையே உறவுப்பாலத்தை மேம்படுத்துகின்றது. இதன் செயற்பாடுகளுக்கு பொறுப்பாகச் செயற்படும் ஆசிரியை திருமதி.த.யோகராசா அவர்களுக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஆசிரியர் அன்பளிப்பு**

கடந்த வருடம் இடமாற்றம் பெற்றுச்சென்ற ஆசிரியர்களான திருமதி.வி.தேவஈஸ்வரன், திருமதி.க.நாகதீசன், திருமதி.கௌ.சிவசிதம்பரம் ஆசிரியர் தலா 5000 வீதம் பாடசாலைக்கு வழங்கிய பணத்தில் கணனி அறைக்கு ஒரு மின் விசிறி, சிறுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டு முற்ற கேற். மற்றும் கொடிக்கம்பம் என்பன னொள்வனவு செய்யப்பட்டுளள்ளது என்பதை தெரிவிப்பதோடு இவர்களுக்கு மனப்பூர்வமான பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## விழுமியச் செயற்பாடுகள்

மாணவர்களிடம் வழுமியப் பண்புகளை வளர்க்கும் நோக்கில் பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தினசரி காலை ஆராதனை, வெள்ளிக்கிழமைப் பூசை, நற்சிந்தனை, குறளும் பொருளும் மற்றும் நவராத்திரி விழா, சித்திரைப் பொங்கல், ஆடிப்பிறப்பு, நாயன்மார் குருபூசை, முதலிய நிகழ்வுகளும் விழுமியப் பண்பை வளர்க்கும் நோக்கில் நடைபெற்று வருகின்றன.

இவற்றுடன் ஆலய சிரமதானப் பணி, ஆசிரியர் தினத்தில் மாலை அணிவித்து தட்சணை வழங்கி ஆசீர்வாதம் பெறுதல் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டு நடைபெறுகிறது.

அத்துடன் ஔவையார் சிலை, சரஸ்வதி சிலை, என்பனவற்றுக்குத் தினமும் மாலை அணிவிக்கும் கைங்கரியம் நேர அட்டவனைப்படி அனைத்து மாணவரும் பங்கேற்கும் வகையில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

## பௌதீக வள அபிவிருத்தி

பல்வேறு அடிப்படை வசதிகள் நிறைவு செய்யப்படாது இருந்த இப்பாடசாலையில் பௌதீக வள தேவைகளில் கடந்த ஆண்டு அறிக்கையில் குறிப்பிட்ட சில தேவைகள் கடந்த சில மாதங்களில் நிறைவு செய்யப்பட்டுள்ளன.
அவையாவன:-

### 1.ஆரம்ப வகுப்பறைத் தொகுதி கூரை மாற்றம்

மிக நீண்ட காலமாக பல்வேறு சுகாதார பௌதீக சீர்கேடாக விளங்கிய மேற்படி கூரைத்தொகுதி தென்மராட்சி கல்வி வலயத்தால் சுமார் 450000 ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு ஓட்டினால் வேயப்பட்டுள்ளது.

### 2.சரஸ்வதி சிலை திரைநீக்கம்

மேற்படி விடயம் தொடர்பாக நான் கோரியபோது மாற்றுக்கருத்தின்றி இந்தச் சிலையினை பிரதிஸ்டை செய்து தர முன்வந்த டாக்கடர் விநாயகமூர்த்தி ஆறுமுகம் ஐயா அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்பூர்வமாக மிகச்சிறந்த முறையில் ஓர் ஆலய அமைப்பில் அதனை நிறுவியுள்ளமை பாடசாலையைப் புதுப்பொலிவு பெறச் செய்துள்ளதோடு மாணவர்களின் ஆத்மீக விழுமியப் பண்புகளை செழுமைப்படுத்துகின்ற நிலையில் மேற்படி ஸ்தாபகரன ஆறுமுகம் ஐயா அவர்களுக்கு எனது மனப்பூர்வமான பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### 3.தளபாடத்திருத்தம்

மிக நீண்ட நாட்களாக திருத்தப்படாமல் இருந்த பாடசாலைத் தளபாடத்தின் பெரும்பகுதி வலயக்கல்வி நிதி ஒதுக்கீட்டின் கீழ் திருத்தப்பட்டு பாவனைக்குத் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

### 4.நூலகப் புத்தகம்

எமது பாடசாலை கற்றல் வள நிலையத்திற்கு புதிய நூல்கள் பற்றாக்குறையாக இருந்த நிலையில் Colombo Gammar School அதிபர் அவர்களால் எமது பாடசாலைக்கு சுமார் 300 நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. வாசிப்பு நூல், பயிற்சி நூல், மொழி விருத்தி நூல் எனப் பல வகைப்பட்ட புத்தகங்கள் எமது பாடசாலைக்கு கிடைக்க உதவிய இணைப்பாளராகச் செயற்பட்ட இராணுவ உத்தியோகத்தருக்கும் எமது நன்றிகள்.

### 5.பரிசில் நாள் நிதியம்

எமது பாடசாலை பழைய மாணவியும் ஓய்வுநிலை வைத்திய அதிகாரியுமான திருமதி.இரத்தினபூபதி சிவலோகநாதன் அவர்கள் தாயாரின் நினைவாக 50000 ரூபாவை பரிசளிப்பு நிதியாக அன்பளிப்புச் செய்துள்ளார்.

இவரது முன்முயற்சியைப் பாராட்டுவதோடு பாடசாலைப் பணியில் பங்காளராக மேலும் பல தாராள மனம் படைத்த பழைய மாணவர்களை வேண்டி நிற்கின்றேன்.

### 6.ஒளவையார் சிலை திரைநீக்கம்

சுயமாக முன்வந்து முறையான அனுமதிபெற்று பாடசாலை வளவில் ஒளவையார் சிலையை பிரதிஸ்டை செய்யும் வேலையை மிகக் குறுகிய காலத்தில் பூர்த்தி செய்த பழைய மாணவரான செல்லையா ஜெயராசா அவர்களை பாராட்டுவதோடு நன்றி கூற கடமைப்பட்டிருக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 7.இலவச பாடசாலைப் பை

இப் பாடசாலையில் அனைத்து மாணவர்களுக்கும் World Vision நிறுவனத்தினரால் பாடசாலைப் புத்தகப்பை அன்பளிப்பாக வழங்கப்பட்டமை சகல மாணவர்களுக்கும் சமத்துவமான கல்வி என்ற நிலையை வலுப்படுத்த உதவுவதோடு வாய்ப்புக் குறைந்த மாணவர்களுக்கு பேருதவியாக அமைந்தது.

### 8.கொத்து விளக்கு அன்பளிப்பு

எமது பண்பாட்டு நிகழ்வின் மையமாக விளங்குவது மங்கள விளக்கேற்றல் இதன் தத்துவத்தை நன்குணர்ந்த விடத்தற்பளை சம்பாவெளிப்பிள்ளையார் ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு.சரவணமுத்து சீவரத்தினம் ஐயா அவர்களும் சரவணமுத்து குணசிங்கம் அவர்களும் எமது பாடசாலைக்கு 4 1/2 அடி உயரமான இரண்டு பித்தளைக் கொத்து விளக்குகள் அன்பளிப்பாக வளங்கியுள்ளார். அவருக்கு பாடசாலை சார்பாக எமது மனப்பூர்வமான நன்றிகள்.

### 9.பித்தளை நிறைகுடம் அன்பளிப்பு

பரிசளிப்பு விழதவை முன்னிட்டு விடத்தற்பளையைச் சேர்ந்த உமாமகேஸ்வரன் மதீபன் என்பவர் பித்தளை நிறைகுட செற்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். உரிய நேரம் உதவி புரிந்த இவருக்கு மனப்பூர்வமான நன்றிகள்.

### 10மாணவர் கௌரவிப்பு

கடந்த 2014ம் ஆண்டு க.பொ.த.சாதாரண தரப்பரீட்சையில் சித்தியடைந்த 9A சித்தி பெற்ற மாணவன் உட்பட அனைவரையும் கௌரவிக்கும் நிகழ்வு கடந்து யூலை மாதம் ஒழுங்கமைக்கப்பட்டு பல்வேறு சூழல்க்காரணிகளால் ஒத்திவைக்கப்பட்ட நிகழ்வு இன்றைய தினம் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்களின் சொந்த நிதி மூலம் இதே சபையில் நிறைவடைய உள்ளதோடு இது போன்ற பாராட்டு நிகழ்வுகள் மாணவர் கல்விக்கு உற்சாகம் வழங்குமாறு அமையும் என்பதை பாடசாலை சமூகத்தினர் உணர்ந்து செயற்பட முன்உதாரண நிகழ்வாக அமைகிறது என்பதை அறியத்தருகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பௌதீக வளத் தேவைகள்

தேவைகள் வரிசையில் முதலிடம் பெறுவது மாடிக் கட்டிடத்தொகுதி 3 வபுப்பறைகள் , களஞ்சிய அறை, ஆசிரியர் ஓய்வு அறை, விஞ்ஞான ஆய்வுகூடம், ஒளிஒலிகூடம் முதலான பல தேவைகள் மாணவர் கல்விக்கு இடையூறாக இருந்து வருகின்றன. இதனை எமது பிரதம விருந்தினர் அவர்கள் உரியவர்களின் கவனத்திற்கு கொண்டுவந்து கூடிய விரைவில் நிறைவு செய்ய ஆவன செய்யுமாறு தங்களைப் பணிவாக வேண்டுகின்றேன்.

ஏனைய தேவைகள்:-

1.விளையாட்டு மைதானம்

2.ஆரம்ப வகுப்பறைத் தொகுதி இரும்பு வலை அமைத்தல்

3.வடக்குப்புற மதில் கட்டுதல்

4.போட்டோப்பிரதி இயந்திரம்

5.பாடசாலை நுழைவாயில் வளைவு

6.அரங்க முன் மண்டபம் அமைத்தல்

7.பெண் ஆசிரியர்களுக்காள மலசலகூடம்

இவற்றை சிறப்பாக நிறைவு செய்வதற்கு பழைய மாணவர்கள் நலன் விரும்பிகள் முன்வருவார்களானால் வளத்தேவைகள் சிறப்பாக நிறைவடைந்து எமது மாணவர்களும் பிற பாடசாலை மாணவர்களைப் போல சமாமன வசதிகள் பெற வழி பிறக்கும் என்பதில் ஐயம் இல்லை.

## ஆசிரிய வளப் பூர்த்தியும் தேவையும்

கடந் காலங்களைப் போலன்றி இப்பாடசாலை இவாண்டில் ஆசிரியர் பற்றாக்குறைக்கு தீர்வு கண்டுள்ளது. குறிப்பாக 9ம், 10ம் தர மாணவர்கள் தெரிவுப்பாடங்கள் படிக்கும் உரிமை இங்கு இருக்கவில்லை. தற்போது மூன்று வகைத் தெரிவுப் பாடத்தையும் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்களை பெற்றுள்ளது.

குறிப்பாக நடன பாட ஆசிரியர் கிடைக்கப்பெற்றமை மாணவிகளின் கல்விக்கு பேருதவியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடற்கல்லி கற்பிக்கும் சிறப்பு பயற்சி பெற்ற ஆசிரியர் கிடைக்கப்பெறின் விளையாட்டுத் துறைசார் போட்டிகளில் சிறப்பிடம் பெற வழி பிறக்கும்.

## பெற்றோர் கவனத்திற்கு

இது உங்கள் பாடசாலை அன்றும் இன்றும் என்றும் உங்கள் பரம்பரைச் சொத்து. இதனை மனப்பூர்வமாக உணர்ந்து நிர்வாகத்துடன் இணைந்து செயற்பட முன்வாருங்கள். அடுத்த கிராமத்துக்கு பிள்ளைகளை காவிச்செல்லும் மனப்பாங்கினை மாற்றுங்கள். ஆலோசனைகளை முன்வையுங்கள். குறைகளைச் சுட்டிக்காட்டுங்கள். தரம் 1இல் அனுமதி பெறும் மாணவர்களை தரம் 11 வரை கற்பதற்கு அனுமதியுங்கள். இதனால் பதடசாலை சித்தி வீத உயர்வுக்கு நீங்கள் உதவுகிறீர்கள். இதற்கு சிறந்த உதாரணமாக விளங்குபவர் நடராஜா லிருஜனன் அவர்கள் நினைத்தால் எந்தக் கல்லூரியிலும் அனுமதி பெற்றிருக்க முடியும். ஆனால் அவர் பாடசாலையை நேசித்தார். கிராமத்தை மதித்தார். ஆசிரியரை நம்பினார். நிர்வாகத்தில் பற்று வைத்தார். இதன்பேறு உங்கள் கிராமம் எங்கிருக்கின்றது என பலரை அறியவைத்தது.

எனவே எந்தப் பெற்றோரும் இடைவிலகும் கலாசாரத்திற்கு என்னிடம்அனுமதி கோர வேண்டாம் என தங்களை தயவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

## நன்றிகள்

இன்றைய பரிசில் நாள் நிகழ்விற்கு எமது அன்பான அழைப்பை ஏற்று வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் விருந்தினர்கள், கல்வித்திணைக்கள அதிகாரிகள், உத்தியோத்தர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், எமது ஆசிரிய குழாத்தினர், மாணவர்கள், நலன் விரும்பிகள், பெற்றோர்கள் அனைவருக்கும் இந்நாளில் பாடசாலைச் சமூகத்தின் சார்பில் அதிபர் என்ற வகையில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

நன்றி

வணக்கம்

திரு.கு.நாகேந்திரன்
வித்தியாலய முதல்வர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிபர் ஆசிரியர் விபரம் - 2015

1.திரு.இ.நாகேந்திரன் - Sp.Trd(Prl)B.A,P.G.D.E
2.திரு.செ.ஜெயசீலன் - Sp.Trd(Agri)
3.திரு.பா.விக்கினேஸ்வரன் - B.A, P.G.D.E, M.A
4.திரு.தி.கிருஸ்ணமூர்த்தி ஐயர் - Sp.Trd(Sci),BA
5.திரு.சி.தவராசசிங்கம் - B.A, P.G.D.E
6.திருமதி.கு.கதிர்காமநாதன் - Sp.Trd(Hin)
7.திருமதிதி.வ.செல்வராணி - Sp.Trd(Mus)
8.திருமதி.த.யோகராசா - Sp.Trd(Pri)
9.திருமதி.கோ.மதுராதரன் - Sp.Trd(Eng)
10.திருமதி.உ.சிவபாலன் - Dip.in.Tech(mus)
11.திருமதி.ப.கணேசலிங்கம் - Sp.Trd(mat)
12.திருமதி.சி.இராசவிநாயகம் - Sp.Trd(Pri)
13.திருமதி.ச.பிரதீன் - Dip.in.Tech-ICT (Part time)
14.திருமதி.சி.சந்திரகாந்தன் - Sp.Trd(Pri)
15.திருமதி.க.செல்வராசா - Sp.Trd(Agri)
16.திருமதி.ஜெ.நந்தகுமார் - B.F.A (Dance)
17.திருமதி.சி.திருப்பதி - Sp.Trd(sci)
18.திருமதி.ந.கணபதிப்பிள்ளை - B.A(Hons-Poli-Sci)
19.திருமதி.ந.ஜென்சன் றொனால்ட் - B.A(Hons-tamil)
20.திருமதி.வி.சிவபாலன் - Dip.in.Tech(Home.Eco)

**01.க.பொ.த.சா.தர.உயர் பெறுபேற்று நிதியம் -**
**திருமதி ந.சிவஞானலிங்கம்**
செல்வன்.ந.லிரூஜனன்

**02.கற்றலில் ஆர்வமுள்ள உதவி தேவைப்படும் மாணவர் நிதியம்**
செல்வி.த.பானுஜா - தரம் - 04
செல்வி.ந.லக்சனா - தரம் - 06
செல்வி.க.சிவடர்சி - தரம் - 09

**03.தங்கரத்தினம் அரியரத்தினம் ஞாபகார்த்த புலமைப்பரிசில் நிதியம்**
செல்வி.ந.செந்துஜா
செல்வன்.தே.சோபிதன்
செல்வன்.சி.ஜெனகன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04.திருமதி.கலாநிதி செல்வராசா அவர்களின் விவசாய பாட நிதியம் பரிசு பெறுவோர்

செல்வன்.ந.லிருஜனன்
செல்வி.செ.சௌந்தர்ஜஜெட்சமணி

05.திருமதி.பத்மராணி சுதாகரன் க.பொ.த.சாதாரணதர உயர் பெறுபேறு நிதியம்

செல்வன்.ந.லிருஜனன்

06.இராசா கோபலகிருஸ்ணர் இணைபாடவிதான நிதியம்

ந.அனிந்தினி
யோ.குமுதினி
ஜோ.டென்சிகா
ச.மதுசா
இ.பிருந்தா
சி.சிவப்பிருந்தா
ந.சுவர்ணகா
செ.செனந்தஜெத்சமணி
ந.லிருஜனன்

## பாடசாலையின் கௌரவம்பெறும் சாதனையாளர்கள்

01.தரம் 11 செல்வன் நடராசா லிருஜனன்

- உலக கைகழுவுதல் தினம் (வலய மட்டம் 4ம் இடம்)
- சமூக விஞ்ஞானப் போட்டி (அகில இலங்கை மட்டம் 5ம் இடம்)
- அனர்த்த முகாமைத்துவப் போட்டி (மாகாணமட்டம் 2ம் இடம்)
- சர்வதேச முதியோர் தினம் கட்டுரை (வரைதல் 1ம் இடம்)
- க.பொ.த.சா.தர ஒன்பது பாட சித்தி (9A)
- விவசாய அறிவுப் போட்டி (சிறப்புத் தேர்ச்சி வலயமட்டம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02.தரம் 10 செல்வி.ஜொன்ஸ்போல் டென்சிகா
- தமிழ்த்தினப் போட்டி கவிதை ஆக்கம்
(வலயமட்டம் 3ம் இடம்)

03.தரம் 08 செல்வன்.ஐங்கரன் விதுரன்
- தமிழ்த்தினம் பேச்சுப்போட்டி
(வலய மட்டம் 2ம் இடம்)
- நாவலர் குருபூசை தினம் பேச்சு
(மாவட்ட மட்டம் 2ம் இடம்)
- சமூக விஞ்ஞானப் போட்டி
(வலய மட்டம் 1ம் இடம்)
- OPTIMI சான்றிதழ்
(மூன்று தவனை)

04.தரம் 08 செல்வன் தேவ,ஸ்வரன் சோபிதன்
-தமிழ்த்தினப் போட்டி கட்டுரை
(வலய மட்டம் 3ம் இடம்)
- உலக கைகழுவுதல் திகம்
(வலய மட்டம் 3ம் இடம்)
- நாவலர் குருபூசை தினம் கட்டுரை
(வலய மட்டம் 2ம் இடம்)
- OPTIMI சான்றிதழ்
(மூன்று தவனை)

05 தரம் 08 செல்வி.நாதராசா செந்துஜா
- தமிழ்த்தினப்போட்டி வாசிப்பு
(வலய மட்டம் 1ம் இடம்)
- உலக கைகழுவுதல் தினம்
(வலய மட்டம் 3ம் இடம்)

06.தரம் 08 செல்வி.சுந்தரலிங்கம் விதுர்ஷனா
- தமிழ்த்தினப் போட்டி பாவோதல்
(சிறப்புத் தேர்ச்சி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07.தரம் 05 செல்வன் சி.சிவகுமார் பவித்திஜரன்

- புலமைப்பரிசில் சித்தி

08.தரம் 04 செல்வன் ஞானசேகர் சதுர்ஷன்

- கணித துரித கற்றல் போட்டி
(சிறப்புத்தேர்ச்சி)
- சைவபரிபாலண சபை - தமிழ் பாடம்
(4ம் இடம்)
- OPTIMI சான்றிதழ்
(மூன்று தவனை)

09.தரம் 04 செல்வி.ஜெயராசா குவிந்தனா

- அறநெறி, திருக்குறள் (மனனம்)
(வலய மட்டம் 3ம் இடம்)

10.தரம் 03 செல்வி சத்தியகுமார் சேனுஜா

- கணித துரித கற்றல் போட்டி
(சிறப்புத்தேர்ச்சி)
- ஆங்கில தினப்போட்டி
(copy writing வலய மட்டம்)
- அறநெறி திருக்குறள், மனனம்
(வலயமட்டம்)
- சைவபரிபாலனசபை போட்டி
(3ம் இடம்)
- நாவலர் குருபூசை தினம் பேச்சு)
(மாவட்டம் 2ம் இடம்)

11.தரம் 02 செல்வன் ஜொபின்சன் மாதுளன்

- அறநெறிப்போட்டி
(வலயமட்டம் 2ம் இடம்)

12.தரம் 02 செல்வி மிதுர்ஷிகா பிரபாகரன்

- அறநெறிப்போட்டி
(வலய மட்டம் 2ம் இடம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13.தரம் 11 செல்வி சிவப்பிருந்தா சிவநாதன்
- கவிதை ஆக்கம்
(வலய மட்டம் 3ம் இடம்)
- பண்ணிசை
(வலயமட்டம் தேர்ச்சி)

14.தரம் 11 செல்வி செனந்ஜெத்சமணி செபஸ்ரியன்
- க.பொ.த.சா.ரா 06 பாடங்களில் விசேட சித்தி
(சமூகவிஞ்ஞானப் போட்டி வலய மட்டம்-3ம் இடம்)

## தரம் - 01

| | | |
|---|---|---|
| 01.ப.ஹபிசாந் | - | சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல் |
| 02.அ.அபிஷாந் | - | சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல் |
| 03.செ.கலையரசன் | - | சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல் |
| 04.ஜெ.தேனுசன் | - | சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல் |
| 05.சு.சுபர்தன் | - | கணிதம், தமிழ் |
| 06சுஇபிரதீபன் | - | கணிதம் |
| 07.ஜெ.தேனுசன் | - | சமயம், தமிழ், கணிதம் |
| 08.இ.மிதுர்சிகா | - | சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல் |
| 09.சி.கதிர்நிலா | - | சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல் |
| 10.கே.ஜனசினா | - | தமிழ், கணிதம் |
| 11.நே.தர்மினா | - | தமிழ், கணிதம் |
| 12.ம.தமிழினி | - | சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல் |
| 13.ச.தமிழ்ச்செல்வி | - | கணிதம் |

## தரம் - 02

| | | |
|---|---|---|
| 14.ஜெ.நிருசன் | - | சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல் |
| 15.ஜொ.மாதுளன் | - | சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல் |
| 16.த.விதுசன் | - | சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல் |
| 17.சி.தருண் | - | சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல் |
| 18.ர.பவித்திரா | - | சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல் |
| 19.கு.சரண்ஜா | - | சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல் |
| 20.ந.அபர்னா | - | சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல் |
| 21.சி.சங்கவி | - | சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல். |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 22.அ.நிலோசினி | - | சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல் |
| 23.ம.ரம்மியா | - | சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல் |
| 24.ஆ.அஜந்தா | - | தமிழ் |
| 25.சா.சாளினி | - | தமிழ் |

## தரம் - 03

| | | |
|---|---|---|
| 26.அ.விதுர்சன் | - | சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல் |
| 27.சு..நிலவெளிலன் | - | சம, தமிழ், சுற்றா, கணி, ஆங்கிலம் |
| 28.யோ.பானுஜன் | - | சுற்றாடல் |
| 29.சு.பிரதிகாந் | - | சமயம், சுற்றாடல் |
| 30.ப.ஸிரேசா | - | சம, தமிழ், கணி, சுற்றா, ஆங்கிலம் |
| 31.ச.சேனுஜா | - | சம, தமிழ், கணி, சுற்றா, ஆங்கிலம் |
| 32.த.வானுஜா | - | சம, தமிழ், கணி, சுற்றா, ஆங்கிலம் |
| 33.மோ.கவிசா | - | சமயம் |
| 34.து.துசாளினி | - | சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல் |
| 35.ச.விதுர்சனா | - | சமயம், கணிதம் |
| 36.கு.டிசானி | - | சமயம் |
| 37.ஐ.கவியரசி | - | சமயம், தமிழ், சுற்றாடல் |
| 38.சி.கிதுஷா | - | சமயம், தமிழ், சுற்றாடல் |

## தரம் - 04

| | | |
|---|---|---|
| 39.சிகிருஷன் | - | தமிழ், சம, கணி, சுற்றா, ஆங்கிலம் |
| 40.ஞா.சதுர்சன் | - | தமிழ், சம, கணி, சுற்றா, ஆங்கிலம் |
| 41.சி.சுஜானன் | - | சமயம், தமிழ் |
| 42.மு.பிரவீன் | - | தமிழ் |
| 43.ர.திலக்ஷனா | - | தமிழ், சமயம் |
| 44.இ.தர்சினி | - | சமயம், தமிழ், கணிதம் |
| 45.ஜெ.தமிழினி | - | சமயம், தமிழ் |
| 46.ஜெ.தேனுஜா | - | தமிழ் |

## தரம் - 05

| | | |
|---|---|---|
| 47.சி.பவித்திரன் | - | தமிழ், சமய, கணி, சுற்ற, ஆங் |
| 48.செ.சர்மிளா | - | கணிதம், ஆஙிலம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49.க.கஜானா - கணிதம்
50.ந.லக்சனா - கணிதம், ஆங்கிலம்
51.வி.குபனி - தமிழ், சமயம், கணி, சுற், ஆங்கிலம்

## தரம் - 06

52.ஆ.பினேகாஸ் - செ.தொழி, தமிழ், வாழ்.குடி
53.சி.ஜனகன் - சம, தமி, கணி, ஆங், வர, சுகா, வாழ்.குடி, செ.தொழி
54.யோ.யஜித் - சமயம், செ.தொழி, வா.குடி சங்
55.ஷெ.தாட்சாயினி - செ.தொழி
56.த.தர்மிகா - சமயம், ஆங்கிலம்
57.ஜெ.கருணதீபா - சமயம், சங்
58.க.தரணியா - சமயம்
59.ஜெ.நிரூசனா - சமயம், தமிழ், கணி, ஆங், வாழ்.குடி
60.அ.பிரதீபா - சம, தமி, கணி, ஆங், வர, சுகா, வாழ்.குடி, செ.தொழி
61.ஏ.அர்ச்ஷனா - சம,தமி,செ.தாழி, வாழ்.குடி, புவி, சங்
62.செ.யட்சனா - சம, தமி, கணி, செ.தொழி, புவி, சங், சம, வாழ்.குடி
63.மோ.சிந்துஜா - சம, தமி, கணி, செ.தொழி, வா.குடி, செ.தொழி, சங்
64.ர.வக்ஷனா - சம, தமி, கணி, வர, வா.குடி, செ.தொழி, சங்

## தரம் - 07

65.தே.சோபிதன் - சம, தமி, கணி, ஆங், புவி, சங், தொ.நு, சுகா, குடி
66.சி.தனுசாந்தன் - சம, தமி, தொ.நு, குடி
67.ந.அஜெந்தன் - தொ.நு
68.யோ.பிந்துஜன் - தொ.நு, சமயம், குடி, ஆங்
69.சி.நிரஞ்சன் - சம, குடி, ஆங், தொ.நு, சங், தமி
70.லோ.மோகிதன் - சம, தமி, ஆங், குடி, சங், தொ.நு
71.அ.சுஜீவன் - சம, தொ.நு, குடி
72ஐ.விதுரன் - சம, தமி, கணி, ஆங், புவி, சங், தொ.நு, சுகா, குடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

73.ம.நிக்ஷனா - குடி, தொ.நு
74.வி.சர்மினி - குடி
75.இ.சுவேதிகா - சம, ஆங், குடி
76.நா.செந்துஜா - சம, தமி, கணி, ஆங், புவி, சங், தொ.நு, குடி
77.சு.விதுர்ஷனா - சம, தமி, ஆங், குடி
78.செ.லாவண்ணியா - குடி

## தரம் - 08

79.ந.டிதுர்ஷன் - தமி, ஆங்
80.ந.சுஜிர்தா - சம, தமி, கணி, ஆங், விஞ், வர, தொ.நு, குடி, புவி, சங், சுகா
81.ந.டினோஜா - சம, தமி, கணி, ஆங், சுகா, தொ.நு, குடி, சங்
82.கு.ஜாழினி - தமி, சங்
83.கு.ரம்ஷிகா - தமி, வா.குடி, சங்
84.யோ.டலக்சிகா - தமி, தொ.நு, வா.குடி
85.மு.நிசாந்தி - தமிழ்
86.ஜெ.சுஜிதா - சம, தமி, ஆங், குடி, சங்

## தரம் - 09

87.சொ.மதுசன் - ஆங்கிலம்
88.த.கஜானன் - சம,தமி,கணி, ஆங், விஞ், வர, சுகா
89.சி.சிவலக்சியா - சம, தமி, ஆங்
90.அ.சிவதர்சி - தமிழ்
91.ந.விதுர்ஜா - சம, தமி, ஆங்
92.ந.நிதுர்ஜா - சம, தமி, ஆங்

## தரம் - 10

93.கு.உதயதர்சன் - சமயம்
94.ந.அனிந்தினி - சமயம்
95.ச.மதுஷா - சம, தமி, ஆங், கணி, சங், புவி
96.லோ.குமுதினி - சம,கணி,ஆங்,தமி,வர,புவி, சங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 97.சு.யுகிர்தா | - | சமயம் |
| 98.சு.நிருசனா | - | சமயம் |
| 99.ந.சுவர்ணகா | - | கணிதம் |
| 100.யோ.டென்சிகா | - | சம, சங்கீதம் |

தரம் - 11

| | | |
|---|---|---|
| 101.ந.லிருஜனன் | - | எல்லாப் பாடங்களும் |
| 102.நா.நிருஷன் | - | விவசாயம் |
| 103.இ.பிருந்தா | - | சம, விவ |
| 104.சி.சிவப்பிருந்தா | - | சம, தமி, கணி, விவ, சங், புவி |
| 105.சௌந்த ஜெட்சமணி | - | சம, தமி,கணி,வர,புவி, சங், விவ |

## பரிசில் நாள் அன்பளிப்பு பெற்றோர், நலன் விரும்பிகள்

| இல | பெயர் | தொகை |
|---|---|---|
| 01. | கா.லோகநாதன் | 2000 |
| 02. | ந.நவதீசன் | 2000 |
| 03. | இ.துஷ்ஜந்தன் | 1000 |
| 04. | ச.சத்தியகுமார் | 1000 |
| 05. | க.சிவராசா | 1000 |
| 06. | ஞா.ஞானசேகர் | 1000 |
| 07. | ம.கதிரித்தம்பி | 1000 |
| 08. | த.தங்கராசா | 700 |
| 09 | க.ஐங்கரன் | 600 |
| 10. | ம.சஜந்தன் | 500 |
| 11. | க.கணேசலிங்கம் | 500 |
| 12. | ந.ரவிச்சந்திரன் | 500 |
| 13. | ஐ.குணரத்திணம் | 500 |
| 14. | S.ஜோன்ஸ்போல் | 500 |
| 15. | S.சந்திரலிங்கம் | 500 |
| 16. | க.நடேசபிள்ளை | 500 |
| 17. | வி.குகானந்தன் | 500 |
| 18. | க.ஆனந்தராசா | 500 |
| 19. | மு.தங்கராசா | 500 |
| 20. | வெ.செல்வறஞ்சன் | 500 |
| 21. | அ.ஜெயரூபன் | 500 |
| 22. | சி.பத்மலகீந்திரன் | 500 |
| 23. | இ.பிரபாகரன் | 500 |
| 24. | இ.கேதீஸ்வரன் | 500 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 25. | செ.சிலம்பரசன் | 500 |
| 26. | செ.செல்வநாதன் | 500 |
| 27. | க.தவரூபன் | 500 |
| 28. | சிசிவயோகராசா | 500 |
| 29. | செ.மயூரன் | 500 |
| 30. | இ.யோகநாதன் | 500 |
| 31. | வ.சிவராசா | 500 |
| 32. | சி.சிறீகாந்தன் | 500 |
| 33. | ஐ.தேவஈஸ்வரன் | 500 |
| 34. | க.அமரதாசன் | 500 |
| 35. | இ.இராசரத்தினம் | 500 |
| 36. | க.நடராசலிங்கம் | 500 |
| 37. | வெ.அருந்தவராசா | 500 |
| 38. | மு.சிவப்பிரகாசம் | 500 |
| 39. | பொ.முத்துக்குமார் | 500 |
| 40. | ப.ஷெல்ரன் | 500 |
| 41. | அ.சொறிஸ்கணபாலன் | 500 |
| 42. | அ.ஜெயராசா | 500 |
| 43. | ஆ.அனந்தகுமார் | 500 |
| 44. | இ.சுரேஸ் | 500 |
| 45. | ந.ஜெயராசா | 500 |
| 46. | சி.கமலரூபன் | 500 |
| 47. | க.தேவதாசன் | 500 |
| 48. | திரு.தி.கணேசபிள்ளை | 500 |
| 49. | கி.நகுலேஸ்வரன் | 500 |
| 50. | செ.தயாளன் | 500 |
| 51. | க.தேவன் | 500 |
| 52. | க.ஏகாம்பரம் | 500 |
| 53. | சு.இராகவன் | 500 |
| 54. | சி.சிவசொரூபன் | 500 |
| 55. | த.சிவந்தினி | 500 |
| 56. | சி.பிரகாஸ் | 500 |
| 57. | சி.ஜெபின்சன் | 500 |
| 58. | கி.சுந்தரலிங்கம் | 500 |
| 59. | இ.சுந்தரஞானலிங்கம் | 500 |
| 60. | பா.தங்கேஸ்வரன் | 500 |
| 61. | மு.சந்திரகுமார் | 500 |
| 62. | ஜி.ரகிதா | 500 |
| 63. | சு.நடேசநாதன் | 500 |
| 64. | க.அருள்வாசன் | 500 |
| 65. | பு.ஜெயந்தன் | 500 |
| 66. | S.கணேசமூர்த்தி | 500 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 67. | லூ.நேசதாஸ் | 500 |
| 68. | அ.குணசிங்கம் | 500 |
| 69. | ப.வில்வராசா | 500 |
| 70. | இ.நந்தகுமார் | 500 |
| 71. | சி.செல்வகுமார் | 500 |
| 72. | சு.சிவபாலன் | 500 |
| 73. | க.அருள்ரத்தினம் | 500 |
| 74. | ஈ.நிரோஜா | 500 |
| 75. | நகுலானந்தம் | 500 |
| 76. | வே.நாகராசா | 500 |
| 77. | பி.சுரேஸ்நிமலன் | 500 |
| 78. | S.மகேஸ்வரன் 500 | |
| 79. | S.ஜெசிதரன் | 400 |
| 80. | ச.சசிகுமார் | 300 |
| 81. | கு.பிரிந்தா | 300 |
| 82. | பா.சுரேந்திரன் | 300 |
| 83. | யோ.நிரஞ்சனா | 200 |
| 84. | இ.இரத்தினசிங்கம் | 200 |

## பரிசில் நாள் அன்பளிப்பு அதிபர், ஆசிரியர்கள்

| | |
|---|---|
| 1.திரு.இ.நாகேந்திரன் | 1000.00 |
| 2.திரு.பா.விக்கினேஸ்வரன் | 1000.00 |
| 3.திரு.தி.கிருஸ்ணமூர்த்தி ஐயர் | 1000.00 |
| 4.திரு.சி.தவராசசிங்கம் | 1000.00 |
| 5.திருமதி.கு.கதிர்காமநாதன் | 1000.00 |
| 6.திருமதிதி.வ.செல்வராணி | 1000.00 |
| 7.திருமதி.த.யோகராசா | 1000.00 |
| 8.திருமதி.கோ.மதுராதரன் | 1000.00 |
| 9.திருமதி.உ.சிவபாலன் | 1000.00 |
| 10.திருமதி.ப.கணேசலிங்கம் | 1000.00 |
| 11.திருமதி.சி.இராசவிநாயகம் | 1000.00 |
| 12.திருமதி.ச.பிரதீன் | 1000.00 |
| 13.திருமதி.சி.சந்திரகாந்தன் | 1000.00 |
| 14.திருமதி.க.செல்வராசா | 1000.00 |
| 15.திருமதி.ஜெ.நந்தகுமார் | 1000.00 |
| 16.திருமதி.சி.திருப்பதி | 1000.00 |
| 17.திருமதி.ந.கணபதிப்பிள்ளை | 1000.00 |
| 18.திருமதி.ந.ஜென்சன் றொனால்ற் | 1000.00 |
| 19.திருமதி.வி.சிவபாலன் | 1000.00 |
| 20.திரு.கு.பவானந்தம் | 1000.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நன்றி

Principal
SCHOOL IMPROVEMENT ACCOUNT
J/Vidathatpalai Kamalasani Vid.
Treasurer

Sivagajan Press - Kodikamam - 021 205 0303, 077 768 2131

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org